# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,139 — 1960 ජූනි 3 වැනි සිකුරාදා — 3.6.1960

12,139 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 137 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 137 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — |

| | பக்கம் |
|---|---|
| ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| ஏல விற்பனைகள் .. .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

1/23/6/3 (ஜி) தொகுதி 2.

### மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—பெப்ருவரி 1958

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ந் திகதி, 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ந் திகதி, 1959 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ந் திகதி, 1959 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ந் திகதி, 1959 ம் ஆண்டு பெப்ருவரி மர்தம் 26 ந் திகதி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ந் திகதி, 11,603, 11,832, 11,852, 12,002, 12,665, 12,087 இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட, 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ந், 1959 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ம், 1959 ம் ஆண்டு டிசெம்பர் மர்தம் 3 ந், 1960 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ம், 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ந் திகதிகளிடப்பட்ட தனித்தனி விளம்பரங்களைத் தொடர்ந்து, 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க் காணும் பரீட்சார்த்திகளும், தபால் எழுதுவினைஞர் சேவையின் பொது வகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| திலகசேன டபிள்யு. .. | 313/6 டாம் வீதி, கொழும்பு 1 |
| பெரேரா எச். பி. .. | விக்கிரமசிங்கா தேனீர்க்கடை, உகல்பொடை, களுத்துறை |
| ஜயவர்த்தன ஆர். டி. | உப்தபாற் கந்தோர், மீலனபாலன, கோறளை. |

2. அரசாங்கம், இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனுல், இடங்கள் காலியாக வரும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்தமானவையாகவும், சேவையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டனவுமாகும்.

3. பரீட்சார்த்திகளுடன் தபாற் கந்தோர்த் தலைமை அதிபர் நேரிற் தொடர்பு வைப்பார்.

எச். இ. பீரிஸ்,
திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு 1,
1960 ம் ஆூ மே மீ 30 ந் உ.

---

### சௌக்கியப் பகுதி

### வைத்திய ஆய்கூட உதவியாளர் பரீட்சை

13.5.60 ம் திகதிய 12,130 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிட்டுள்ள மேற்கூறிய விடயம் தொடர்பாக

ஆருவ்து பந்தி பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

6. 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும் ஒரு போட்டிப் பரீட்சையின் முடிவைக் கொண்டே தேர்வு நடைபெறும்.

செ. பொன்னம்பலம்,
பிரதி சௌக்கிய சேவை அதிபதி.

1960 ம் ஆூ மே மீ 25 ந் உ.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இராணுவ தலைமைக் காரியாலயம்—கொழும்பு

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம், 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிவரை இராணுவத்திற்கான பின்வரும் சேவைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஜுன் மாதம் 24 ந் திகதி முற்பகல் 9½ மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) கொழும்பு, பனுகொட, தியத்தலாவை, திருகோணமலை, அம்பாரை, மன்னுர், ரிதியகம ஆகிய நிலையங்களுக்கு இறைச்சி, புதிய மீன், கருவாடு, பாற் பண்ணை உற்பத்திப் பொருட்கள், தோட்டப் பொருட்கள், காய்கறி ஆகியவைகள் விநியோகஞ் செய்தல் ;

(ஆ) கொழும்பில் மாத்திரம் பலசரக்குச் சாமான்கள், அரிசி, கறிச சாமான்கள் விநியோகஞ் செய்தல் ;

(இ) கொழும்பிலும், தியத்தலாவையிலும் மாத்திரம் மெத்தைகளுக்குத் தேவையான வைக்கோல் விநியோகஞ் செய்தல் ;

(ஈ) தியத்தலாவையில் மாத்திரம் வண்டிகள், வேலையாட்கள், மலசலகூட சுத்திகர சேவை ஆகியவை ;

(உ) இராணுவ விடுதிச் சாலைகளுக்கும், இராணுவ வைத்தியசாலைகளுக்கும், (அ) ப் பிரிவில் குறிப்பிட்டுள்ள 7 ஸ்தானங்களிலுமுள்ள ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்களுக்கும் அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் ;

(ஊ) தியத்தலாவை, திருகோணமலை, அம்பாரை, மன்னுர், ரிதியகம ஆகிய ஸ்தானங்களுக்கு மாத்திரம் பாண் விநியோகஞ் செய்தல்

முழு விபரங்களையும் " இராணுவ தலைமைக் காரியாலயம், லோவர் லேக் ரேட், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு " என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. ஆர். ஜெயசிங்க,
கப்டன்.
மேஜர் ஜெனரலுக்காக,
இராணுவத் தளபதி.

கொழும்பு,
1960 ம் ஆூ மே மீ 28 ந் உ.

---

### நீர்ப்பாசன இலாகா

மேற்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர், கொட்டா தெரு, கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு ஆனி மாதம் 28 ந் திகதி காலை 11.30 மணிவரை சப்பரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த வலாங்கொடையில் இரண்டாம் பிரவேசப் பாதையின் கண ஐந்து செய்கரை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்வார்.

இரத்தினபுரி சிறுபகுதி நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களில் இரு பிரதிகளில், சீலிடப்பட்ட கடிதமூலம் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் யாவும் மேற்கூறிய காரியாலயத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் 10,000/– ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப் படுத்தும் கொந்தராத்துக்காரர்கட்கு, 25/– ரூபாய் கச்சேரியில் கட்டி ரசீது பெற்றுச் சமர்ப்பித்தவுடன் 3.6.60 தொடக்கம் 24.6.60 வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்தராத்து வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரிடமிருந்து, வேலை நன்முறையில் நடைபெறுகிறதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப் பத்திரம் பெற்று, கேள்விப் பத்திரங்கட்கு மனுச்செய்யும்பொழுது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ மறுப்பதற்கோ அல்லது சிலவற்றை மட்டும் மறுப்பதற்கோ அதுவுமின்றி ஏதாவது ரெண்டரின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கோ சகல உரிமையும் உடையதென உறுதிப் படுத்தப்படுகிறது.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
இரத்தினபுரி சிறுபகுதி.

---

**நீர்ப்பாசன இலாகா**

மொனருகலை உப-பகுதியிலுள்ள எற்றிமொலவாவித்திட்டத்திலுள்ள 7 ம் சங்கிலியிலுள்ள 1 ம் இலக்க உடைப்பை நிரப்புவதற்கான கேள்விப்பத்திரங்களை, 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ம் திகதி காலை 10 மணி வரைக்கும், பண்டாரவளையிலுள்ள பெரும்பாக பொறியியலாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மொனருகலை உப-கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். உப-கந்தோரில் பிளான்கள் பார்ப்பதற்கும் வேறு விபரங்கள் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

ஒரு கச்சேரியில் அல்லது மொனருகலை உப-கந்தோரிலேனும் ரூபா 50/– கட்டுப்பணமாய்க் கட்டி பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 21.6.60 வரைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள், நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 26,000/– அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்க வேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின், அவ்வேலைகளைப் பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச்செய்ய வேண்டும்.

ஒ. எஸ். சந்திரரத்ன,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
(உப-கந்தோர், மொனருகலை.)

மொனருகலை,
1960 ம் ஆண்டு மே மீ 18 ந் உ.

---

**இலங்கைப் போக்குவரத்துச் சபை**

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள மத்திய வேலைத்தல நிலையத்தில் ஒரு நிலையான தண்ணீர் தாங்கியை நிறுவ, 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதி பிரதம இஞ்சினியரிடம் (குடியியல்) விண்ணப்பிக்கலாம்.

தண்ணீர் நிறுத்திவைக்கும் அமைப்புக்களை அனுகூலமாய் செய்து முடித்த, ரூபா 60,000 — க்கும் அதற்கு மேலதிகமான செலவுகொண்ட வேலை செய்வதற்கு பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் மாத்திரம் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க உரிமையுள்ளவர்கள். அவர்களுடைய சான்றோலைகளை பரிசோதித்து அனுமதிப்பதற்கு அவைகளை பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள பிரதி பிரதம இஞ்சினியரிடம் (குடியியல்) கொடுக்க வேண்டும். அப்படியான சான்றோலைகளை பிரதி பிரதம இஞ்சினியர் (குடியியல்) அனுமதித்தபின் கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 — ஐக் கட்டவேண்டும்.

1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டியதும் பிரதி பிரதம இஞ்சினியர் (குடியியல்) கேள்விப்பத்திர சாதனம் வழங்குவார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையால் வழங்கப்படும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் தயாரிக்கவேண்டும்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

1960 ம் ஆண்டு மே மீ 30 ந் உ.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

**5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

**7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரசல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

**13. ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஒராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | தபாற் செலவுடன் |
| ஒராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது